MELUR MUNICIPALITY
Minutes of the Council Meeting held on **04.10.2021** (Urgent)

| Resolution No. | Serial Number and subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 152 | **மன்றப்பொருள் எண்.1**<br>மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் 2021–2022ம் ஆண்டு சட்டமன்ற கூட்டத்தொடரில் நகராட்சி நிர்வாக துறை மான்ய கோரிக்கையின் அறிவிப்பின்படி, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.21663/2021/தி1 நாள்.27.09.2021 கடிதத்தில் தெரிவித்துள்ளதற்கிணங்க மேலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு 5ல் அண்ணாகாலனி மற்றும் வ.உ.சி நகர் பகுதியில் அமைந்துள்ள சமுதாய கழிப்பறைகளை மேம்படுத்தும் பணி மேற்கொள்ள ரூ.10.00 இலட்சம் மதிப்பீடு தயார்செய்யப்பட்டுள்ளதற்கு அரசு முழு மானியத்துடன் கூடிய நிர்வாக அனுமதி வழங்கக்கோரி விரிவான திட்ட மதிப்பீடு தயார்செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் ,சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 1821/2021/இ1 | அனுமதிக்கப்பட்டது. |
| 153 | **மன்றப்பொருள் எண்.2**<br>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.20800/2021/யுபிஎ 1 நாள்.23.09.2021 கடிதத்தில் தெரிவித்துள்ளதற்கிணங்க மேலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் புதிதாக நகர்புற ஆதரவற்றோர் மற்றும் நோயாளிகளின் காப்பாளர்கள் தங்கும் இல்லம் அரசு மருத்துவமனை வளாகத்திற்குள் கட்டும் பணி மேற்கொள்ள ரூ. 1.00 கோடி மதிப்பீடு தயார்செய்யப்பட்டுள்ளதற்கு அரசு முழு மானியத்துடன் கூடிய நிர்வாக அனுமதி வழங்கக்கோரி விரிவான திட்ட மதிப்பீடு தயார்செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் ,சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 1843 /2021/இ1 | அனுமதிக்கப்பட்டது. |
| 154 | **மன்றப்பொருள் எண்.3**<br>இந்நகராட்சி பொதுப்பிரிவில் உள்ள Kyocera Printer ல் கருப்பாக பட்டையான ஒரு லைன் பிரிண்ட் வருவதால் அதனை சரிசெய்ய ஆய்வு செய்ததில் Drum, Roller, Blade ஆகிய பாகங்கள் மாற்ற ஆகும் | அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | செலவினம் ரூ.10000/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>அலுவலக பிரிண்டரின் அத்தியாவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | |
| 155 | **மன்றப்பொருள் எண்.4**<br>இந்நகராட்சி அலுவலக பொதுப்பிரிவு மற்றும் பொறியியல் பிரிவிற்கான கணினிகளை இணைக்கும் KEVIN 5 KVA UPS கடந்த 11.09.2021 முதல் பழுதடைந்து இயங்காமல் உள்ளதை தொடர்ந்து அதனை பழுதுநீக்கம் செய்ய Panel board ல் சில பாகங்கள் மாற்றம் செய்யவும், தற்போதுள்ள 12 பேட்டரிகளை புதியதாக மாற்றம் செய்யவும், UPS இல்லாமல் கணினிகளை இயக்குவது பழுதடைய நேரிடும் என்பதால் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு UPS ஐ சரிசெய்து, பேட்டர்களையும் புதிதாக வாங்கி பொருத்த ஆகும் உத்தேச செலவினம் ரூ.90000/க்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1759/2021/இ1 | அனுமதிக்கப்பட்டது. |
| 156 | **மன்றப்பொருள் எண்.5**<br>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.18698/2021/பி2 நாள்.27.09.2021—ன்படி, கலைஞர் நகர்புர மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட மலம்பட்டி ஊரணி மற்றும் மண்கட்டி தெப்பக்குளம் ஊரணிகளை மேம்படுத்தும் பணி மேற்கொள்ள ரூ.150.00இலட்சத்திற்கு மதிப்பீடு தயார்செய்யப்பட்டுள்ளதற்கு அரசு முழு மானியத்துடன் கூடிய நிர்வாக அனுமதி வழங்கக்கோரி விரிவான திட்ட மதிப்பீடு தயார்செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 157 | **மன்றப்பொருள் எண்.6**<br>மேலூர் நகராட்சியில் 2020—2021ம் ஆண்டிற்கு ஒப்பந்ததாரரிடம் பிடித்தம் செய்த வருமான வரி , GST சேவைவரி, EPF Filling return file செய்த வகைக்கு Sanjey Solutions நிறுவனத்திற்கு ரூ.50500/— வழங்க மன்றத்தின் அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது. |
| | அலுவலகக்குறிப்பு | |

| | | |
|---|---|---|
| | 2020–2021ம் ஆண்டிற்கு வருமான வரி GST சேவைவரி, e-TDS செய்தமைக்கு ஆகும் செலவினத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.3471/2011/பி1) | |
| 158 | **மன்றப்பொருள் எண்.7**<br>மேலூர் நகராட்சியில் மத்திய /மாநில அரசின் வழிகாட்டுதல்படி இந்நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளிலும் உள்ள நீர்நிலைகள், குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள், குடிநீர் செல்லும் பகிர்மான குழாய்கள் விபரங்கள், வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ள குடியிருப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ள குடிநீர் குழாய் இணைப்பு உள்ள வீடுகள், குடிநீர் குழாய் இணைப்பு இல்லாத வீடுகள், பொதுகுடிநீர் குழாய் விபரங்கள் போன்றவை JalJeevan Mission (JJM) திட்டத்தின்கீழ் மிகவும் துல்லியமாக விபரங்கள் மற்றும் வரைபடங்கள் தயார்செய்து கேட்கப்பட்டுள்ளதால்,மேற்படி பணியை சர்வே செய்ய ஆளில்லா விமானம் Drone Camera மூலம் அளவீடு செய்யும் பணிக்கு உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 159 | **மன்றப்பொருள் எண்.8**<br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.23ல் அமைந்துள்ள தினசரி சந்தை கட்டிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. எனவே பழுதடைந்த தினசரி சந்தை கட்டிடத்தை இடித்துவிட்டு அந்த இடத்தில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தில் புதிதாக தினசரி சந்தை கட்டிடம் கட்ட தமிழ்நாடு சட்டமன்ற சட்ட அறிவிப்பின்படி ரூ.650.00 இலட்சம் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் புதிதாக சந்த கட்டிடம் நகர் ஊரமைப்பு துறை வழிகாட்டுதலின்படி வரைபடம் தயார்செய்தல்/ கட்டிடப்பணி மேற்கொள்ள மண்ணின் தன்மை (SBC) அறிதல்/ அதற்கேற்ப கட்டிட வடிவமைப்பு பெறுதல்/ அதன்பேரில் விரிவான மதிப்பீடு தயார் செய்தல்/ அதனை TUFIDCO நிறுவனத்தில் சமர்ப்பித்து ஒப்புதல்பெறுதல்/ அதற்கான நிர்வாக அனுமதி தொழில்நுட்ப அனுமதி பெறுதல் போன்ற பணிகளை Technical Consultant நியமனம் செய்து பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.9.75இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |